Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

॥ श्रीः ॥

॥ संक्षेपरामायणम् ॥

ஸம்க்ஷேப ராமாயணம்

(தேவநாகரியிலும், தமிழிலும்)

வியாகரண சிரோமணி, வேதாந்த வித்வான்,
'ஸ்ரீ சங்கர கிருபா' உதவி ஆசிரியர், ஸ்ரீரங்கம்
ப்ரஹ்மஸ்ரீ K. S. வெங்கடராம சாஸ்திரிகள்
எழுதிய தமிழ் பொழிப்புரையுடன் கூடியது

வெளியிட்டோர்:
ஸ்ரீ வேம்பய்யர் சாசுவத தர்ம சாஸனம்
கிருஷ்ணபுரம், கடையநல்லூர்.

இலவச விநியோகம்.

ஸ்ரீ வாணி விலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம்.

1973

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

॥ श्रीः ॥

॥ संक्षेपरामायणम् ॥

ஸம்க்ஷேப ராமாயணம்

(தேவநாகரியிலும், தமிழிலும்)

வியாகரண சிரோமணி, வேதாந்த வித்வான்,
'ஸ்ரீ சங்கர கிருபா' உதவி ஆசிரியர், ஸ்ரீரங்கம்
ப்ரஹ்மஸ்ரீ **K. S. வெங்கடராம சாஸ்திரிகள்**
எழுதிய தமிழ் பொழிப்புரையுடன் கூடியது

வெளியிட்டோர்:

ஸ்ரீ வேம்பய்யர் சாசுவத தர்ம சாஸனம்
கிருஷ்ணபுரம், கடையநல்லூர்.

இலவச விநியோகம்.

ஸ்ரீ வாணி விலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம்.

1973

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

॥ श्रीः ॥

॥ श्रीसीतालक्ष्मणभरतशत्रुघ्नहनुमत्समेतरामचन्द्रपरब्रह्मणे नमः ॥

॥ संक्षेपरामायणम् ॥

ஸம்க்ஷேப ராமாயணம்

[ஸம்க்ஷேப ராமாயணம் என்பது ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தில் முதலாவது ஸர்க்கம். இதில் ராமாயண கதை முழுவதும் மிகச் சுருக்கமாக நாரதரால் வால்மீகி முனிவருக்குக் கூறப்படுகிறது. ராமாயண கதை ஸம்க்ஷேபமாகக் கூறப்படுவதால் ஸம்க்ஷேபராமாயணம் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. ஸ்ரீ ராம நாமாவிலேயே ஸித்திபெற்ற ஸ்ரீ வால்மீகி முனிவரின் வாக்கிலிருந்து ராமாயண மஹாகாவியம் வெளிப்பட வேண்டுமென்று பகவத் சங்கல்பம், ப்ரஹ்மாவின் ஸங்கல்பம். இதையொட்டி நாரதர் வால்மீகி முனிவருக்கு ராமகதையை உபதேசிப்பதற்காக அவருடைய ஆசிரமத்திற்கு வருகிறார். யத்ருச்சையாக வால்மீகிமுனிவர் கேட்பதும் ஸ்ரீ ராமசந்திரனைப்பற்றியதாகவே இருப்பதால் மிகவும் ஆனந்தத்துடன் நாரத மஹரிஷி ராமகதை முழுவதையும் ஆதியோடந்தமாக சுருக்கமாக உபதேசித்து பலனையும் கூறிமுடிக்கிறார்.]

तपःस्वाध्यायनिरतं तपस्वी वाग्विदां वरम् ।
नारदं परिपप्रच्छ वाल्मीकिर्मुनिपुङ्गवम् ॥ १ ॥

தபः ஸ்வாத்யாய நிரதம் தபஸ்வீ வாக்விதாம் வரம்
நாரதம் பரிபப்ரச்ச வால்மீகிர் முனிபுங்கவம்

தவத்துடன் கூடிய வால்மீகி, தவம், வேதம் இதில் ஈடுபட்டவரும், பேச்சுத்திறமையுள்ளவர்களுள் சிறந்தவரும், முனி சிரேஷ்டருமான நாரதரைப் பார்த்துக் கேட்டார். (1)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

को न्वस्मिन्साम्प्रतं लोके गुणवान्कश्च वीर्यवान् ।
धर्मज्ञश्च कृतज्ञश्च सत्यवाक्यो दृढव्रतः ॥ २ ॥

கோ ந்வஸ்மின் ஸாம்ப்ரதம் லோகே குணவான் கஸ்ச வீர்யவான்
தர்மஜ்ஞஸ்ச க்ருதஜ்ஞஸ்ச ஸத்யவாக்யோ த்ருடவ்ரதः

இந்த பூலோகத்தில் இப்பொழுது (இக்காலத்தில்) யார் நற்குணங்களுடன் கூடியிருப்பவர்? வீர்யமுள்ளவர் யார்? தர்மம் அறிந்தவர், நன்றியறிவுள்ளவர், உண்மையான வார்த்தை பேசுபவர், உறுதியுடன் விரதத்தை நடத்துபவர் யார்? (''பூலோகத்தில் இக்காலத்தில்'' என்பதால் பூலோகத்தில் ஜீவித்துக் கொண்டிருக்கும் மனிதரைப்பற்றிய கேள்வி என்று தெரிகிறது.) (2)

चारित्रेण च को युक्तः सर्वभूतेषु को हितः ।
विद्वान्कः कः समर्थश्च कश्चैकप्रियदर्शनः ॥ ३ ॥

சாரித்ரேண ச கோ யுக்தः ஸர்வபூதேஷு கோ ஹிதः
வித்வான் கः கः ஸமர்த்தஸ்ச கஸ்சைக ப்ரியதர்சனः

நல்ல நடத்தையோடு கூடியவர் யார்? எல்லா பிராணிகளுக்கும் நன்மை புரிபவர் யார்? அறிவுள்ளவர் யார்? திறமையுள்ளவர் யார்? எவர் ஒருவருடைய தோற்றம் எப்பொழுதும் எல்லோருக்கும் ஆனந்தத்தை உண்டாக்கும்? (3)

आत्मवान्को जितक्रोधो द्युतिमान्कोऽनसूयकः ।
कस्य बिभ्यति देवाश्च जातरोषस्य संयुगे ॥ ४ ॥

ஆத்மவான் கோ ஜிதக்ரோதோ த்யுதிமான் கோऽநஸூயகः
கஸ்ய பிப்யதி தேவாஸ்ச ஜாதரோஷஸ்ய ஸம்யுகே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மனதை அடக்கியவர் யார்? கோபத்தை ஜயித்தவர் யார்? காந்தியுள்ளவர் யார்? பொருமையில்லாதவர் யார்? சண்டையில் எவருக்குக் கோபம் ஏற்பட்டால் அஸுரர்கள் மட்டுமில்லாமல் தேவர்களும் பயப்படுகிறார்கள்? (இங்கு தேவர்கள் பயப்படுவதாகக் கூறுவதாலும், அடுத்த சுலோகத்தில் 'நரம்' என்று கூறுவதாலும் மனிதரைப்பற்றிய கேள்வி என்று தெரிகிறது) (4)

एतदिच्छाम्यहं श्रोतुं परं कौतूहलं हि मे ।
महर्षे त्वं समर्थोऽसि ज्ञातुमेवंविधं नरम् ॥ ५ ॥

ஏததிச்சாம்யஹம் ச்ரோதும் பரம் கௌதூஹலம் ஹி மே
மஹர்ஷே த்வம் ஸமர்த்தோ ஸி ஞாதுமேவம்விதம் நரம்

இதை (கீழே கூறப்பட்ட 16 குணங்களுடன் கூடிய வரை) உங்களிடம் கேட்டுத்தெரிந்துகொள்ள நான் விரும்புகிறேன். எனக்கு மிகுந்த ஆவல் இருக்கிறது. மஹரிஷியே! இப்பேற்பட்ட (16 குணங்கள் நிறைந்த) மனிதரை அறிந்துகொள்வதற்கு நீர் ஸமர்த்ய முள்ளவராக இருக்கிறீர். (5)

श्रुत्वा चैतत्त्रिलोकज्ञो वाल्मीकेर्नारदो वचः ।
श्रूयतामिति चामन्त्र्य हृष्टो वाक्यमब्रवीत् ॥ ६ ॥

ச்ருத்வா சைதத் த்ரிலோகஜ்ஞோ வால்மீகேர்
நாரதோ வசः
ச்ரூயதாமிதி சாமந்த்ர்ய ப்ரஹ்ருஷ்டோ வாக்யமப்ரவீத்

வால்மீகியின் இந்த வார்த்தையைக் கேட்டு மூவுலகங்களிலுமுள்ள விசேஷங்களை யறிந்த நாரதர் 'கேட்கவேண்டும்' என்று வால்மீகிமுனிவரை யழைத்து ஸந்தோஷமடைந்தவராக பின்வரும் வார்த்தையைக் கூறினார். (6)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

बहवो दुर्लभाश्चैव ये त्वया कीर्तिता गुणाः ।
मुने वक्ष्याम्यहं बुद्ध्वा तैर्युक्तः श्रूयतां नरः ॥ ७ ॥

பஹவோ துர்லபாஸ்சைவ யே த்வயா கீர்த்திதா குணா:
முநே வக்ஷ்யாம்யஹம் புத்த்வா தைர் யுக்த:
ச்ரூயதாம் நர:

முனிவரே! உம்மால் கூறப்பட்ட அநேகம் குணங்கள் மிகவும் அரிதானவை. (ஓரிடத்தில் சேர்ந்து காணமுடியாதவை) ஆனலும் நான் ஆலோசித்துக் கூறுகிறேன். அந்த குணங்களோடு கூடிய மனிதனைக் கேளும். (ஈசுவரனிடமுள்ள குணங்களோடு கூடிய அக்காலத்திலுள்ள மனிதரைப்பற்றிக் கேட்பதால் விஷ்ணுவின் அவதாரமான ராமரின் சரித்ரத்தைக் கூறுகிறார்.) (7)

इक्ष्वाकुवंशप्रभवो रामो नाम जनैः श्रुतः ।
नियतात्मा महावीर्यो द्युतिमान्धृतिमान्वशी ॥ ८ ॥

இக்ஷ்வாகு வம்ச ப்ரபவோ ராமோ நாம ஜநை: ச்ருத:
நியதாத்மா மஹாவீர்யோ த்யுதிமான் த்ருதிமான் வசீ

இக்ஷ்வாகு வம்சத்தில் அவதரித்து ராமர் என்றே ஜனங்களிடம் பிரசித்தமானவர் நீர் கூறிய 16 குணங்களுடன் கூடியவர். இவர் மனதை யடக்கியவர், மிகுந்த வீர்யமுள்ளவர், காந்தியுள்ளவர், தைர்யமுள்ளவர். எல்லாவற்றையும் தன் வசப்படுத்திக் கொண்டவர். (8)

बुद्धिमान्नीतिमान्वाग्मी श्रीमान् शत्रुनिबर्हणः ।
विपुलांसो महाबाहुः कम्बुग्रीवो महाहनुः ॥ ९ ॥

புத்திமான் நீதிமான் வாக்மீ ச்ரீமான் சத்ரு நிபர்ஹண:
விபுலாம்ஸோ மஹாபாஹு: கம்புக்ரீவோ மஹாஹநு:

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சிறந்த புத்தியுள்ளவர் நிபாய முறைப்படி நடப்பவர், பேச்சுத்திறனுள்ளவர், ஐசுவர்யமுள்ளவர், எதிரிகளை யழிப்பவர், அகன்று உயர்ந்த தோள்கள் உள்ளவர், பெரிய கைகளுள்ளவர்; சங்கு போன்ற கழுத்து உள்ளவர், அழகிய தாடையுள்ளவர். (9)

महोरस्को महेष्वासो गूढजत्रुररिंदमः ।
आजानुबाहुः सुशिराः सुललाटः सुविक्रमः ॥ १० ॥

மஹோரஸ்கோ மஹேஷ்வாஸோ கூடஜத்ருரரிந்தம:
ஆஜானுபாஹு: ஸுசிரா: ஸுலலாட: ஸுவிக்ரம:

அகன்ற மார்புள்ளவர், பெரிய வில்லை உடையவர், மறைந்த கழுத்து எலும்புகளுள்ளவர், எதிரிகளை அடக்குபவர், முழங்கால்வரை நீண்ட கைகளுள்ளவர் அழகிய சிரஸ்ஸும், நெற்றியுமுள்ளவர், அழகிய நடையுள்ளவர். (10)

समः समविभक्ताङ्गः स्निग्धवर्णः प्रतापवान् ।
पीनवक्षा विशालाक्षो लक्ष्मीवान् शुभलक्षणः ॥ ११ ॥

ஸம: ஸமவிபக்தாங்க: ஸ்நிக்தவர்ண: ப்ரதாபவான்
பீநவக்ஷா விசாலாக்ஷோ லக்ஷ்மீவான் சுபலக்ஷண:

எல்லோரிடத்திலும் ஸமமாகப் பக்ஷபாதமில்லாமல் இருப்பவர், ஒழுங்காகப் பிரிந்துள்ள அவயவங்களை உடையவர். பளபளப்பான மேனியின் நிறமுள்ளவர். எதிரிகளை அச்சுறுத்தும் வலிமையைக் காட்டும் காந்தி உள்ளவர், பருத்த மார்பு உள்ளவர், அகன்ற கண்களுள்ளவர், லக்ஷ்மியுடன் கூடியவர் (ஐசுவர்யமுள்ளவர்), மங்களகரமான லக்ஷணங்கள் பொருந்தியவர். (11)

धर्मज्ञः सत्यसन्धश्च प्रजानां च हिते रतः ।
यशस्वी ज्ञानसंपन्नः शुचिर्वश्यः समाधिमान् ॥ १२ ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தர்மஜ்ஞः ஸத்யஸ்ந்தஸ்ச ப்ரஜாநாம் ச ஹிதே ரத:
யசஸ்வீ ஞானஸம்பந்நः சுசிர் வச்யः ஸமாதிமான்

தர்மமறிந்தவர், ஸத்யமான ப்ரதிஜ்ஞையுள்ளவர், பிரஜைகளுக்கு நன்மை செய்வதில் ஈடுபட்டவர், புகழுடன் கூடியவர், அறிவு நிறைந்தவர், சுத்த மானவர், நல்லோர்களுக்கு வசப்பட்டவர், மன ஒருமைப்பாடு உள்ளவர். (12)

प्रजापतिसमः श्रीमान् धाता रिपुनिषूदनः ।
रक्षिता जीवलोकस्य धर्मस्य परिरक्षिता ॥ १३ ॥

ப்ரஜாபதிஸமः ச்ரீமான் தாதா ரிபுநிஷூதந:
ரக்ஷிதா ஜீவலோகஸ்ய தர்மஸ்ய பரிரக்ஷிதா

பிரஹ்மாவிற்கு ஒப்பானவர், சோபையுள்ளவர், உலகைப் போஷிப்பவர் அல்லது படைப்பவர், எதிரி களையழிப்பவர், ஜீவராசிகளைக் காப்பாற்றுபவர், தர்மத்தை நன்கு காப்பாற்றுகிறவர். (13)

रक्षिता स्वस्य धर्मस्य स्वजनस्य च रक्षिता ।
वेदवेदाङ्गतत्त्वज्ञो धनुर्वेदे च निष्ठितः ॥ १४ ॥

ரக்ஷிதா ஸ்வஸ்ய தர்மஸ்ய ஸ்வஜநஸ்ய ச ரக்ஷிதா
வேத வேதாங்க தத்வஜ்ஞோ தநுர்வேதே ச நிஷ்டித:

ஸ்வதர்மத்தைக் காப்பாற்றுகிறவர், தன்னைச் சேர்ந்தவர்களைக் காப்பாற்றுகிறவர். வேதம், வேதத்தின் ஆறு அங்கங்கள் இவைகளின் உண்மைப் பொருளையறிந்தவர் வில்வித்தையில் மிக்கத்திறமை யுள்ளவர். (14)

सर्वशास्त्रार्थतत्त्वज्ञः स्मृतिमान्प्रतिभानवान् ।
सर्वलोकप्रियः साधुरदीनात्मा विचक्षणः ॥ १५ ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸர்வ சாஸ்த்ரார்த்த தத்வஜ்ஞ: ஸ்ம்ருதிமான்
ப்ரதிபானவான்
ஸர்வ லோக ப்ரிய: ஸாதுரதீநாத்மா விசக்ஷண:

எல்லா சாஸ்திர விஷயங்களின் உண்மைக் கருத்தை அறிந்தவர், ஞாபகசக்தி மிகுந்தவர், ஸம யோசித புத்தியுள்ளவர், எல்லா ஜனங்களுக்கும் பிரிய மானவர், குற்றமற்றவர், தைன்யமில்லாத கம்பீரமான ஸ்வபாவமுள்ளவர், அறிவாளி. (15)

सर्वदाभिगतः सद्भिः समुद्र इव सिन्धुभिः ।
आर्यः सर्वसमश्चैव सदैकप्रियदर्शनः ॥ १६ ॥

ஸர்வதாபிகத: ஸத்பி: ஸமுத்ர இவ ஸிந்துபி:
ஆர்ய: ஸர்வ ஸமஸ்சைவ ஸதைக ப்ரியதர்சந:

நதிகள் கடலை நோக்கிச்செல்வதுபோல் ஸாதுக்கள் ராமரிடம் சென்று அவரை ஆசிரயிக்கின்றனர். நல்ல நடத்தையுள்ளவர்; எல்லோரையும் பக்ஷபாதமில்லாமல் ஸமமாகப் பார்க்கிறவர், எப்பொழுதும் நிகரற்றதும், மனதிற்குப் பிரீதியையே உண்டுபண்ணுகிறதுமான தோற்றமுள்ளவர் (16)

स च सर्वगुणोपेतः कौसल्यानन्दवर्धनः ।
समुद्र इव गाम्भीर्ये धैर्येण हिमवानिव ॥ १७ ॥

ஸ ச ஸர்வ குணோபேத: கௌஸல்யாநந்த வர்த்தந:
ஸமுத்ர இவ காம்பீர்யே தைர்யேண ஹிமவானிவ

எல்லா நற்குணங்களுடன் கூடிய அந்த ராமர் கௌஸல்யைக்கு ஆனந்தத்தை வளர்க்கின்றவர் (அவளுடைய குமாரர்) காம்பீர்யத்தில் (பிறர் அறிய முடியாத ஆழ்ந்த மனோபாவத்தில்) ஸமுத்திரம் போலும், தைர்யத்தால் இமயமலை போலுமிருப்பவர் (கலங்காத மனமுள்ளவர்). (17)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

विष्णुना सदृशो वीर्ये सोमवत्प्रियदर्शनः ।
कालाग्निसदृशः क्रोधे क्षमया पृथिवीसमः ॥ १८ ॥

धनदेन समस्त्यागे सत्ये धर्म इवापरः ।

விஷ்ணுநா ஸத்ருசோ வீர்யே ஸோமவத் ப்ரியதர்சநः
காலாக்நி ஸத்ருசः க்ரோதே க்ஷமயா ப்ருதிவீஸமः

தநதேந ஸமஸ்த்யாகே ஸத்யே தர்ம இவாபரः

வீர்யத்தில் விஷ்ணுவுக்கு ஸமமானவர், சந்திரன் போல் இன்பம் தரும் தோற்றமுள்ளவர், கோபத்தில் பிரளயகாலாக்னிக்கு ஒப்பானவர், பொறுமையில் பூமியைப் போன்றவர், தியாகத்தில் (கொடையில்) குபேரனுக்கு ஸமமானவர், ஸத்யத்தில் மற்றொரு தர்ம தேவதை போன்றவர். (18½)

तमेवंगुणसंपन्नं रामं सत्यपराक्रमम् ॥ १९ ॥

ज्येष्ठं श्रेष्ठगुणैर्युक्तं प्रियं दशरथः सुतम् ।
प्रकृतीनां हिते युक्तं प्रकृतिप्रियकाम्यया ॥ २० ॥

यौवराज्येन संयोक्तुमैच्छत्प्रीत्या महीपतिः ।

தமேவம் குண ஸம்பந்நம் ராமம் ஸத்யபராக்ரமம்

ஜ்யேஷ்டம் ச்ரேஷ்ட குணைர் யுக்தம் ப்ரியம்
தசரதः ஸுதம்
ப்ரக்ருதீநாம் ஹிதே யுக்தம் ப்ரக்ருதி ப்ரிய காம்யயா

யௌவராஜ்யேந ஸம்யோக்துமைச்சத்
ப்ரீத்யா மஹீபதிः

இத்தகைய குணங்கள் நிறைந்தவனும், வீண் ஆகாத பராக்ரமமுள்ளவனும், மூத்த குமாரனும், சிறந்த குணங்களோடு கூடியவனும், தனக்குப் பிரிய மானவனும், பிரஜைகளின் நன்மையில் ஈடுபட்டவனு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மான அந்த ராமனை தசரத மன்னர் ஜனங்களுக்குப் பிரீதி ஏற்படுவதில் ஆசையால் இளவரசு பதவியுடன் சேர்ப்பதற்கு ஸந்தோஷத்துடன் விரும்பினர். [பட்டாபிஷேக ஏற்பாடுகளைச் செய்தார்.] (20½)

तस्याभिषेकसंभारान्दृष्ट्वा भार्याथ कैकयी ॥ २१ ॥

पूर्वं दत्तवरा देवी वरमेनमयाचत ।
विवासनं च रामस्य भरतस्याभिषेचनम् ॥ २२ ॥

தஸ்யாபிஷேக ஸம்பாரான் த்ருஷ்ட்வா
பார்யாऽத கைகயீ

பூர்வம் தத்தவரா தேவீ வரமேநமயாசத
விவாஸநம் ச ராமஸ்ய பரதஸ்யாபிஷேசநம்

பிறகு பட்டாபிஷேகத்திற்கு சாமக்ரிகள் சேகரிக்கப் படுவதைப்பார்த்து முன் ஒரு சமயம் (சம்பராஸுர யுத்த ஸமயத்தில் தான் ஸாரதயம் செய்து அதனால் பிரீதி யடைந்த தசரத மன்னரிடமிருந்து வெகுமதியாக) வரங்களைப் பெற்றுக்கொண்ட அந்த மன்னரின் மனைவி யான கைகேயீதேவி இம்மன்னரிடம் 'ராமனை நாட்டை விட்டு வெளியேற்றுவதையும், பரதனுக்கு பட்டாபிஷேகத்தையும்' வரமாக யாசித்தாள். (21-22)

स सत्यवचनाद्राजा धर्मपाशेन संयतः ।
विवासयामास सुतं रामं दशरथः प्रियम् ॥ २३ ॥

ஸ ஸத்ய வசநாத் ராஜா தர்ம பாசேந ஸம்யத:
விவாஸயாமாஸ ஸுதம் ராமம் தசரத: ப்ரியம்

தர்மம் என்னும் கயிற்றால் கட்டப்பட்ட அந்த ராஜா வான தசரதர் தன் வாக்யம் (பொய்யாகாமல்) உண்மை யாவதற்காக தன் பிரிய புத்ரனை ராமனை நாட்டை விட்டு வெளியேற்றினர். (23)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

स जगाम वनं वीरः प्रतिज्ञामनुपालयन् ।
पितुर्वचननिर्देशात्कैकेय्याः प्रियकारणात् ॥ २४ ॥

ஸ ஜகாம வநம் வீர: ப்ரதிஜ்ஞாமநுபாலயன்
பிதுர் வசன நிர்தேசாத் கைகேய்யா: ப்ரிய காரணாத்

வீரனான அந்த ராமன் கைகேயிக்கு பிரீதி ஏற்படுவதற்குக்காரணமான தந்தையின் உத்தரவு வார்த்தையினால் ப்ரதிஜ்ஞையைக் காப்பாற்றுகிறவராய் காட்டிற்குச் சென்றார். (24)

तं व्रजन्तं प्रियो भ्राता लक्ष्मणोऽनुजगाम ह ।
स्नेहाद्विनयसंपन्नः सुमित्रानन्दवर्धनः ॥ २५ ॥
भ्रातरं दयितो भ्रातुः सौभ्रात्रमनुदर्शयन् ।

தம் வ்ரஜந்தம் ப்ரியோ ப்ராதா லக்ஷ்மணோநுஜகாம ஹ
ஸ்நேஹாத் விநய ஸம்பந்ந: ஸுமித்ராநந்த வர்த்தந:
ப்ராதரம் தயிதோ ப்ராது: ஸௌப்ராத்ரமநுதர்சயன்

ராமனிடம் பிரியம்கொண்ட ஸஹோதரனும், வினயத்துடன் கூடியவனும் ஸுமித்ரைக்கு ஆனந்ததை வளர்க்கின்றவனும் (குமாரனும்) அண்ணவிற்கு பிரியமானவனுமான லக்ஷ்மணன் ஸஹோதர அன்பைக் காண்பித்துக் கொண்டு சிநேகத்துடன் காட்டிற்குச் செல்லும் ஸஹோதரனை அந்த ராமனைப் பின் தொடர்ந்து சென்றான். (25½)

रामस्य दयिता भार्या नित्यं प्राणसमा हिता ॥ २६ ॥
जनकस्य कुले जाता देवमायेव निर्मिता ।
सर्वलक्षणसंपन्ना नारीणामुत्तमा वधूः ॥ २७ ॥
सीताप्यनुगता रामं शशिनं रोहिणी यथा ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

'ராமஸ்ய தயிதா பார்யா நித்யம் ப்ராணஸமா ஹிதா

ஜநகஸ்ய குலே ஜாதா தேவமாயேவ நிர்மிதா
ஸர்வ லக்ஷண ஸம்பந்நா நாரீணமுத்தமா வதூ:

ஸீதாப்யநுகதா ராமம் சசிநம் ரோஹிணீ யதா

ராமனுடைய பிரியமனைவியும் அவருடைய உயிருக்கு ஒப்பானவளும் எப்பொழுதும் நன்மை புரிபவளும் ஜநகமஹாராஜாவின் குலத்தில் பிறந்தவளும் புதிதாக எிருஷ்டிக்கப்பட்ட தேவமாயை போல் மிக்க அழகு வாய்ந்தவளும், எல்லா லக்ஷணங்களுடன் கூடிய வளும், பெண்களுக்குள் சிறந்தவளும் (தசரதரின்) நாட்டுப்பெண்ணுமான ஸீதையும் சந்திரனை ரோஹிணி போல் ராமனைப்பின் தொடர்ந்து சென்ருள். (27½)

पौरैरनुगतो दूरं पित्रा दशरथेन च ॥ २८ ॥

शृङ्गिबेरपुरे सूतं गङ्गाकूले व्यसर्जयत् ।
गुहमासाद्य धर्मात्मा निषादाधिपतिं प्रियम् ॥ २९ ॥

गुहेन सहितो रामो लक्ष्मणेन च सीतया ।

பௌரைரநுகதோ தூரம் பித்ரா தசரதேந ச

ச்ருங்கிபேர புரே ஸூதம் கங்காகூலே வ்யஸர்ஜயத்
குஹமாஸாத்ய தர்மாத்மா நிஷாதாதிபதிம் ப்ரியம்

குஹேந ஸஹிதோ ராமோ லக்ஷ்மணேன ச ஸீதயா

தர்மாத்மாவான ராமர் நகர மாந்தர்களாலும், தந்தையான தசரதராலும் சிறிது தூரம் பின் தொடரப் பட்டு (பின் அவர்களை விட்டுவிட்டு) கங்கா நதிக் கரையில் சிருங்கிபேரபுரத்தில் தனக்கு பிரியமானவனும் வேடர்களுக்குத் தலைவனுமான குஹனை யடைந்து குஹனுடனும் லக்ஷ்மணனுடனும் ஸீதையோடும் கூடிய வராய் தேர்ப்பாகனை ஸுமந்திரனை ஊருக்கு அனுப்பினர். (29½)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ते वनेन वनं गत्वा नदीस्तीर्त्वा बहूदकाः ॥ ३० ॥

चित्रकूटमनुप्राप्य भरद्वाजस्य शासनात् ।
रम्यमावसथं कृत्वा रममाणा वने त्रयः ॥ ३१ ॥

देवगन्धर्वसङ्काशास्तत्र ते न्यवसन्सुखम् ।

தே வநேந வநம் கத்வா நதீஸ்தீர்த்வா பஹூதகா:

சித்ரகூடமநுப்ராப்ய பரத்வாஜஸ்ய சாஸநாத்
ரம்யமாவஸதம் க்ருத்வா ரமமாணா வநே த்ரய:

தேவ கந்தர்வ ஸங்காசாஸ் தத்ர தே ந்யவஸன் ஸுகம்

ராமன், லக்ஷ்மணன், ஸீதை என்ற அம்மூவரும் (குஹனையும் விட்டு விட்டு) பல காடுகளின் வழியாகச் சென்று அதிகமான ஜலமுள்ள ஆறுகளைத்தாண்டி பரத்வாஜருடைய உத்தரவினால் சித்ரகூட மலையை யடைந்து காட்டில் அழகிய இருப்பிடத்தை (பர்ணசாலையை) நிர்மாணம் செய்து இன்புறுகிறவர் களாய் தேவர்களுக்கும் கந்தர்வர்களுக்கும் ஒப்பான வர்களாய் அங்கு அவர்கள் ஸுகமாக வஸித்தனர். 31½

चित्रकूटं गते रामे पुत्रशोकातुरस्तदा ॥ ३२ ॥
राजा दशरथः स्वर्गं जगाम विलपन्सुतम् ।

சித்ரகூடம் கதே ராமே புத்ரசோகாதுரஸ் ததா
ராஜா தசரத: ஸ்வர்கம் ஜகாம விலபன் ஸுதம்

ராமன் சித்ரகூட மலையை யடைந்ததும் தசரத மன்னன் புத்திரனைப் பிரிந்த சோகத்தால் பீடிக்கப்பட்ட வராய் அப்பொழுது புத்திரனைப்பற்றியே புலம்பிக் கொண்டு ஸ்வர்க்கலோகம் சென்றார். (32½)

मृते तु तस्मिन्भरतो वसिष्ठप्रमुखैर्द्विजैः ॥ ३३ ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

नियुज्यमानो राज्याय नैच्छद्राज्यं महाबलः ।
स जगाम वनं वीरो रामपादप्रसादकः ॥ ३४ ॥

ம்ருதே து தஸ்மின் பரதோ வஸிஷ்ட ப்ரமுகைர் த்விஜை:
நியுஜ்யமானோ ராஜ்யாய நைச்சத் ராஜ்யம் மஹாபல:
ஸ ஜகாம வநம் வீரோ ராம பாத ப்ரஸாதக:

அந்த தசரதர் இறந்ததும் மிகுந்த பலமுள்ள பரதன் ராஜ்யத்தை ஏற்பதற்கு வஸிஷ்டர் முதலிய பிராமணர்களால் ஏவப்பட்ட போதிலும் ராஜ்யத்தை விரும்பவில்லை. வீரனான அந்த பரதன் பூஜ்யரான ராமரை பிரஸன்னராகச் செய்வதற்காக காட்டிற்குச் சென்றான். (34)

गत्वा तु स महात्मानं रामं सत्यपराक्रमम् ।
अयाचद्भ्रातरं राममार्यभावपुरस्कृतः ॥ ३५ ॥

கத்வா து ஸ மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம்
அயாசத் ப்ராதரம் ராமமார்ய பாவ புரஸ்க்ருத:

அந்த பரதன் மஹாத்மாவும், ஸத்யத்தைக்கடைப் பிடிப்பதில் பராக்ரமத்தைக் காட்டுபவருமான ராமரை யடைந்து நல்ல எண்ணத்தை முன்னிட்டுக்கொண்டு ஸஹோதரரான ராமரிடம் யாசித்தான். (35)

त्वमेव राजा धर्मज्ञ इति रामं वचोऽब्रवीत् ।
த்வமேவ ராஜா தர்மஜ்ஞ இதி ராமம் வசோப்ரவீத்

தர்மத்தை யறிந்த நீர்தான் அரசன் (அரசனுக இருக்கத் தகுதியுள்ளவர்) என்று ராமரிடம் வார்த்தை சொன்னான்.

रामोऽपि परमोदारः सुमुखः सुमहायशाः ॥ ३६ ॥
न चैच्छत्पितुरादेशाद्राज्यं रामो महाबलः ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

रामोपि परमोदारः सुमुखः सुमहायशाः

न सिसेच सुदुराधर्षः राज्यं रामो महाबलः

அண்டினவர்களுக்கு ஆநந்திக்கச் செய்கிறவனுகவும், மிகுந்த உதார ஸ்வபாவமுள்ளவனுகவும் அழகிய முக முள்ளவனுகவும் மிகவும் அதிகசீர்த்தியுள்ளவனுகவும், மிகுந்த பலமுள்ளவனுகவும் இருந்தபோதிலும் ராமன் தந்தையின் உத்திரவினுல் ராஜ்யத்தை விரும்பவில்லை.

पादुके चास्य राज्याय न्यासं दत्त्वा पुनः पुनः ॥ ३७ ॥

निवर्तयामास तदा भरतं भरताग्रजः ।

பாதுகே சாஸ்ய ராஜ்யாய ந்யாஸம் தத்வா புந: புந:

நிவர்தயாமாஸ ததா பரதம் பரதாக்ரஜ:

அப்பொழுது பரதனுக்கு மூத்தவரான ராமன் இந்த பரதனுக்கு ராஜ்யத்தை ஆள்வதற்காக தனக்கு பதிலாக பாதுகைகளைக்கொடுத்து திருப்பித்திருப்பி ஸமாதானம் செய்து பரதனைத் திருப்பியனுப்பினர். (37½)

स काममनवाप्यैव रामपादावुपस्पृशन् ॥ ३८ ॥

नन्दिग्रामेऽकरोद्राज्यं रामागमनकाङ्क्षया ।

ஸ காமமநவாப்யைவ ராம பாதாவுபஸ்ப்ருசன்

நந்திக்ராமேऽகரோத் ராஜ்யம் ராமாகமந காங்க்ஷயா

அந்த பரதன் (ராமரையழைத்துச்செல்லவேண்டு மென்ற) விருப்பம் நிறைவேறுமலேயே நந்திக்ராமத் தில் ஸ்ரீ ராம பாதுகைகளை ஸேவித்துக்கொண்டு ராமர் திரும்பி வருவதை எதிர்பார்த்துக்கொண்டு ராஜ்ய பரிபாலனம் செய்தான். (38½)

गते तु भरते श्रीमान् सत्यसन्धो जितेन्द्रियः ॥ ३९ ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

रामस्तु पुनरालक्ष्य नागरस्य जनस्य च ।
तत्रागमनमेकाग्रो दण्डकान्प्रविवेश ह ॥ ४० ॥

கதே து பரதே ச்ரீமான் ஸத்யஸந்தோ ஜிதேந்த்ரியः

ராமஸ்து புநராலக்ஷ்ய நாகரஸ்ய ஜநஸ்ய ச
தத்ராகமநமேகாக்ரோ தண்டகான் ப்ரவிவேச ஹ

பரதன் சென்றதும் காந்தியுள்ளவனும் உண்மை யான (மாருத) பிரதிஜ்ஞை யுள்ளவனும், புலன்களை ஜயித்தவனுமான ராமனெனில் நகரஜனங்கள் மறு படியும் அங்கு திரும்பி வருவதைப்பற்றி ஆலோசித்து பித்ருவாக்யபரிபாலனம் ஒன்றிலேயே மனதைச் செலுத்தியவனாய் தண்டகாரண்யத்திற்குள் நுழைந் தான். (40)

प्रविश्य तु महारण्यं रामो राजीवलोचनः ।
विराधं राक्षसं हत्वा शरभङ्गं ददर्श ह ॥ ४१ ॥

सुतीक्ष्णं चाप्यगस्त्यं चागस्त्यभ्रातरं तथा ।

ப்ரவிச்ய து மஹாரண்யம் ராமோ ராஜீவ லோசநः
விராதம் ராக்ஷஸம் ஹத்வா சரபங்கம் ததர்ச ஹ

ஸுதீக்ஷ்ணம் சாப்யகஸ்த்யம் சாகஸ்த்ய ப்ராதரம் ததா

தாமரை போன்ற கண்களுள்ள ஸ்ரீராமர் பெரிய தண்டகாரண்யத்திற்குள் நுழைந்து விராதன் என்ற அரக்கனைக்கொன்று விட்டு, (பிறகு) சரபங்கரையும், ஸுதீக்ஷ்ணரையும் அகஸ்தியரையும், அகஸ்தியரின் ஸஹோதரரையும் தர்சித்தார். (41½)

अगस्त्यवचनाच्चैव जग्राहैन्द्रं शरासनम् ॥ ४२ ॥

खड्गं च परमप्रीतस्तूणी चाक्षयसायकौ ।

அகஸ்த்ய வசனுச்சைவ ஜக்ராஹைந்த்ரம் சராஸநம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கட்கம் ச பரம ப்ரீதஸ் தூணீ சாக்ஷய ஸாயகௌ

அகஸ்தியருடைய வார்த்தையால் மிகுந்த ஸந்தோஷமடைந்த ஸ்ரீராமர் இந்திரனுல் அகஸ்தியரிடம் கொடுக்கப்பட்ட வில்லையும், கத்தியையும், குறைவற்ற அம்புகளையுடைய இரண்டு அம்பருத்தூணிகளையும் (அகஸ்தியரிடமிருந்து) பெற்றுக்கொண்டார். (42½)

वसतस्तस्य रामस्य वने वनचरैः सह ॥ ४३ ॥

ऋषयोऽभ्यागमन्सर्वे वधायासुररक्षसाम् ।
स तेषां प्रतिशुश्राव राक्षसानां तथा वने ॥ ४४ ॥

வஸதஸ் தஸ்ய ராமஸ்ய வநே வநசரைः ஸஹ

ருஷயோப்யாகமன் ஸர்வே வதாயாஸுர ரக்ஷஸாம்
ஸ தேஷாம் ப்ரதிசுச்ராவ ராக்ஷஸாநாம் ததா வநே

காட்டில் அந்த ராமன் வனத்தில் ஸஞ்சரிப்பவர்களுடன் கூட வஸிக்கும் பொழுது அஸுரர்களையும் ராக்ஷஸர்களையும் கொல்வதன் பொருட்டு எல்லா முனிவர்களும் வந்தார்கள் அந்த ராமன் ராக்ஷஸர்கள் வஸிக்கும் வனத்தில் அவர்கள் வேண்டிக்கொண்டபடியே அம்முனிவர்களுக்கு பிரதிஜ்ஞை செய்தார். (44)

प्रतिज्ञातश्च रामेण वधः संयति रक्षसाम् ।
ऋषीणामग्निकल्पानां दण्डकारण्यवासिनाम् ॥ ४५ ॥

ப்ரதிஜ்ஞாதஸ்ச ராமேண வதः ஸம்யதி ரக்ஷஸாம்
ருஷீணமக்நிகல்பாநாம் தண்டகாரண்ய வாஸிநாம்

அக்னிக்கொப்பானவர்களும் தண்டகாரண்யத்தில் வஸிக்கின்றவர்களுமான முனிவர்களின் பொருட்டு ராமரால், யுத்தத்தில் ராக்ஷஸர்களின் வதம் ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டது. (45)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

तेन तत्रैव वसता जनस्थाननिवासिनी ।
विरूपिता शूर्पणखा राक्षसी कामरूपिणी ॥ ४६ ॥

தேந தத்ரைவ வஸதா ஜநஸ்தாந நிவாஸிநீ
விரூபிதா சூர்பணகா ராக்ஷஸீ காமரூபிணீ

அங்கேயே வஸிக்கின்ற அந்த ராமனால் ஜனஸ்தானத்தில் வஸிக்கின்றவளும் தன் இஷ்டப்படி ரூபமெடுப்பவளுமான சூர்பணகை என்ற ராக்ஷஸி (மூக்கையும் காதையும் அறுத்து) விகாரமான உருவமுள்ளவளாகச் செய்யப்பட்டாள். (46)

ततः शूर्पणखावाक्यादुद्युक्तान्सर्वराक्षसान् ।
खरं त्रिशिरसं चैव दूषणं चैव राक्षसम् ॥ ४७ ॥
निजघान रणे रामस्तेषां चैव पदानुगान् ।

ததः சூர்பணகா வாக்யாதுத்யுக்தான் ஸர்வ ராக்ஷஸான்
கரம் தரிசிரஸம் சைவ தூஷணம் சைவ ராக்ஷஸம்
நிஜகாந ரணே ராமஸ் தேஷாம் சைவ பதாநுகான்

பிறகு ராமர் சூர்பணகையின் வார்த்தையால் சண்டைக்குத்தயாராக வந்த கரனையும், த்ரிசிரஸ்ஸையும். தூஷணன் என்ற ராக்ஷஸனையும், அவர்களின் வழியைப் பின்பற்றி வந்த எல்லா ராக்ஷஸர்களையும் யுத்தத்தில் கொன்றார். 47½

वने तस्मिन्निवसता जनस्थाननिवासिनाम् ॥ ४८ ॥
रक्षसां निहतान्यासन् सहस्राणि चतुर्दश ।

வநே தஸ்மின் நிவஸதா ஜநஸ்தான நிவாஸிநாம்
ரக்ஷஸாம் நிஹதாந்யாஸன் ஸஹஸ்ராணி சதுர்தச

அந்தக்காட்டில் வஸிக்கின்ற ராமரால் ஜனஸ்தானத்தில் வஸிக்கின்ற 14000 ராக்ஷஸர்கள் கொல்லப்பட்டவர்களாக ஆனார்கள். 48½

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ततो ज्ञातिवधं श्रुत्वा रावणः क्रोधमूर्छितः ॥ ४९ ॥
सहायं वरयामास मारीचं नाम राक्षसम् ।

ததோ ஞாதிவதம் ச்ருத்வா ராவண: க்ரோதமூர்ச்சித:
ஸஹாயம் வரயாமாஸ மாரீசம் நாம ராக்ஷஸம்

பிறகு ராவணன் உறவினர்களின் வதத்தைக் கேட்டு கோபத்தால் அறிவு இழந்தவனுய் மாரீசன் என்ற ராக்ஷஸனைத் தனக்கு உதவியாக வேண்டினுன்.

वार्यमाणः सुबहुशो मारीचेन स रावणः ॥ ५० ॥
न विरोधो बलवता क्षमो रावण तेन ते ।

வார்யமாண: ஸுபஹுசோ மாரீசேந ஸ ராவண:
ந விரோதோ பலவதா க்ஷமோ ராவண தேந தே

"ஹே ராவணு! மிகுந்த பலமுள்ள அந்த ராமனுேடு உனக்கு விரோதம் தகுந்ததல்ல" என்று மாரீசனுல் அந்த ராவணன் பலதடவை தடுக்கப் பட்டான். 50½

अनादृत्य तु तद्वाक्यं रावणः कालचोदितः ॥ ५१ ॥
जगाम सहमारीचस्तस्याश्रमपदं तदा ।

அநாத்ருத்ய து தத்வாக்யம் ராவண: கால சோதித:
ஜகாம ஸஹமாரீசஸ் தஸ்யாச்ரம பதம் ததா

மிருத்யுவால் தூண்டப்பட்ட ராவணன் அந்த மாரீசனின் வார்த்தையை அலக்ஷ்யம் செய்து மாரீசனுடன்கூட அப்பொழுது அந்த ராமரின் ஆசிரம பிரதேசத்திற்குச் சென்ருன். 51½

तेन मायाविना दूरमपवाह्य नृपात्मजौ ॥ ५२ ॥
जहार भार्यां रामस्य गृध्रं हत्वा जटायुषम् ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தேந மாயாவிநா தூரமபவாஹ்ய நிருபாத்மஜௌ

ஜஹார பார்யாம் ராமஸ்ய க்ருத்ரம் ஹத்வா ஜடாயுஷம்

(ராவணன்) அந்த மாயாவியான மாரீசன் மூலம் அரசகுமாரர்களான ராம லக்ஷ்மணர்களை வெகுதூரம் போகும்படிசெய்து, கழுகான ஜடாயுவை மரணமேற் படும்படியாக ஹிம்ஸித்துவிட்டு ஸ்ரீ ராமரின் மனைவி யான ஸீதையை அபஹரித்துக்கொண்டு சென்றான்.

गृध्रं च निहतं दृष्ट्वा हृतां श्रुत्वा च मैथिलीम् ॥ ५३ ॥

राघवः शोकसंतप्तो विललापाकुलेन्द्रियः ।

க்ருத்ரம் ச நிஹதம் த்ருஷ்ட்வா ஹ்ருதாம் ச்ருத்வா ச மைதிலீம்

ராகவ: சோக ஸந்தப்தோ விலலாபாகுலேந்த்ரிய:

ராகவன் மரணமேற்படும்படி ஹிம்ஸிக்கப்பட்ட ஜடாயுவை நேரில்கண்டு (அவர் மூலம்) ஸீதை அபஹரிக்கப்பட்டிருப்பதைக்கேட்டு சோகத்தால் பீடிக்கப்பட்டவராய் புலன்கள் கலங்கியவராய் புலம்பினர். (53½)

ततस्तेनैव शोकेन गृध्रं दग्ध्वा जटायुषम् ॥ ५४ ॥

मार्गमाणो वने सीतां राक्षसं संददर्श ह ।

कबन्धं नाम रूपेण विकृतं घोरदर्शनम् ॥ ५५ ॥

ததஸ் தேனைவ சோகேந க்ருத்ரம் தக்த்வா ஜடாயுஷம்

மார்கமாணே வநே ஸீதாம் ராக்ஷஸம் ஸந்ததர்ச ஹ

கபந்தம் நாம ரூபேண விக்ருதம் கோர தர்சநம்

பிறகு ராமர் அந்த சோகத்துடன் கூடியவராகவே கழுகான ஜடாயுவுக்கு தஹன ஸம்ஸ்காரம் செய்து விட்டு, காட்டில் ஸீதையைத் தேடுகிறவராய் விகார மான உருவமுள்ளவனும், பயங்கரமான தோற்றமுள்ள வனுமான கபந்தன் என்ற ராக்ஷஸனைக் கண்டார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

तं निहत्य महाबाहुर्ददाह स्वर्गतश्च सः ।
स चास्य कथयामास शबरीं धर्मचारिणीम् ॥ ५६ ॥

श्रमणीं धर्मनिपुणामभिगच्छेति राघव ।

தம் நிஹத்ய மஹாபாஹுர் ததாஹ ஸ்வர்கதஸ்ச ஸ:
ஸ சாஸ்ய கதயாமாஸ சபரீம் தர்ம சாரிணீம்

ச்ரமணீம் தர்ம நிபுணமபிகச்சேதி ராகவ

நீண்ட கைகளுள்ள ராமன் அந்த கபந்தனைக் கொன்று அவன் உடலை எரித்தான். அவனும் ஸ்வர்க்கம் சென்றான் (ஸ்வர்க்கம் செல்லும்போது) அந்த கபந்தனும் 'ராகவா தர்மத்தை நன்கு அறிந்தவளும், தர்மத்தைச் செய்வதில் திறமையுள்ளவளும் தபஸ்வியுமான சபரியை நோக்கிச் செல்வாயாக என்று இந்த ராமருக்குச் சொன்னான். (56½)

सोऽभ्यगच्छन्महातेजाः शबरीं शत्रुसूदनः ॥ ५७ ॥

शबर्या पूजितः सम्यक् रामो दशरथात्मजः ।

ஸோப்யகச்சன் மஹாதேஜா: சபரீம் சத்ரு ஸூதந:

சபர்யா பூஜித: ஸம்யக் ராமோ தசரதாத்மஜ:

மிகுந்த பராக்ரமமுள்ளவரும், சத்ருக்களை யழிக்கின்றவருமான அந்த ராமர் சபரியிடம் சென்றார். தசரதகுமாரனான ராமர் சபரியால் நன்கு பூஜிக்கப் பட்டார். (57½)

पम्पातीरे हनुमता संगतो वानरेण ह ॥ ५८ ॥

हनुमद्वचनाच्चैव सुग्रीवेण समागतः ।

பம்பாதீரே ஹநுமதா ஸங்கதோ வாநரேண ஹ

ஹநுமத் வசநாச்சைவ ஸுக்ரீவேண ஸமாகத:

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பம்பாஸரஸ்ஸின் கரையில் ராமர் ஹனுமார் என்னும் வானரனுடன் சேர்ந்துகொண்டு, ஹனுமாரின் வார்த்தையினால் ஸுக்ரீவனுடன் சேர்ந்துகொண்டார். (58½)

सुग्रीवाय च तत्सर्वं शंसद्रामो महाबलः ॥ ५९ ॥

आदितस्तद्यथावृत्तं सीतायाश्च विशेषतः ।

ஸுக்ரீவாய ச தத் ஸர்வம் சம்சத் ராமோ மஹாபல:

ஆதிதஸ் தத் யதாவ்ருத்தம் ஸீதாயாஸ்ச விசேஷத:

மிகுந்த பலமுள்ள ராமன் ஆதிமுதற்கொண்டு எல்லா ஸமாசாரத்தையும், முக்யமாக ஸீதையைப் பற்றிய விருத்தாந்தத்தையும், நடந்தவாறு ஸுக்ரீவனிடம் கூறினார். (59½)

सुग्रीवश्चापि तत्सर्वं श्रुत्वा रामस्य वानरः ॥ ६० ॥

चकार सख्यं रामेण प्रीतश्चैवाग्निसाक्षिकम् ।

ஸுக்ரீவஸ்சாபி தத் ஸர்வம் ச்ருத்வா ராமஸ்ய வாநர:

சகார ஸக்யம் ராமேண ப்ரீதஸ்சைவாக்நி ஸாக்ஷிகம்

ஸுக்ரீவ வானரனும் ராமனுடைய அந்த எல்லா சமாசாரத்தையும் கேட்டு பிரீதியடைந்தவனாய் ராமனோடுகூட அக்னிஸாக்ஷிகமாக சிநேகம் செய்துகொண்டான். (60½)

ततो वानरराजेन वैरानुकथनं प्रति ॥ ६१ ॥

रामायावेदितं सर्वं प्रणयाद्दुःखितेन च ।

प्रतिज्ञातं च रामेण तदा वालिवधं प्रति ॥ ६२ ॥

ததோ வாநர ராஜேந வைராநுகதநம் ப்ரதி

ராமாயாவேதிதம் ஸர்வம் ப்ரணயாத் துக்கிதேந ச

ப்ரதிஞ்ஞாதம் ச ராமேண ததா வாலிவதம் ப்ரதி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பிறகு துக்கம்கொண்ட வானர அரசனுன ஸுக்ரீவனுல் வாலியோடு கூட தனக்கு ஏற்பட்ட விரோத விஷயமாக ராமன் கேட்டதற்கு பதிலாக எல்லா சமாசாரமும் சிநேகத்தினுல் தெரிவிக்கப்பட்டது. அப்பொழுது ராமனுல் வாலியின் வதத்தைப்பற்றி உறுதி அளிக்கப்பட்டது. (61 62)

वालिनश्च बलं तत्र कथयामास वानरः ।
सुग्रीवः शङ्कितश्चासीन्नित्यं वीर्येण राघवे ॥ ६३ ॥

வாலிநஸ்ச பலம் தத்ர கதயாமாஸ வாநரः
ஸுக்ரீவ: சங்கிதஸ்சாஸீத் நித்யம் வீர்யேண ராகவே

அங்கு ஸுக்ரீவன் ராமனுக்கு வாலியின் பலத்தைச் சொன்னுன். ஸுக்ரீவன் வாலி வீர்யத்தின் காரணமாக ராமரிடம் அடிக்கடி ஸந்தேஹமுள்ளவனுக இருந்தான்.

राघवप्रत्ययार्थं तु दुन्दुभेः कायमुत्तमम् ।
दर्शयामास सुग्रीवो महापर्वतसन्निभम् ॥ ६४ ॥

ராகவ ப்ரத்யயார்த்தம் து துந்துபேः காயமுத்தமம்
தர்சயாமாஸ ஸுக்ரீவோ மஹா பர்வத ஸந்நிபம்

(அதனுல்) ஸுக்ரீவன் ராமனுடைய பலத்தை அறிந்துகொள்வதற்காக, (ராமனிடம் நம்பிக்கை ஏற்படுவதற்காக) பெரிய மலைக்கு ஸமமான உயர்ந்த துந்துபி என்னும் அஸுரனுடைய உடலெலும்பை (ராமருக்குக்) காட்டினுன். (64)

उत्स्मयित्वा महाबाहुः प्रेक्ष्य चास्थि महाबलः ।
पादाङ्गुष्ठेन चिक्षेप संपूर्णं दशयोजनम् ॥ ६५ ॥

உத்ஸ்மயித்வா மஹாபாஹு: ப்ரேக்ஷ்ய சாஸ்த்தி மஹாபல:
பாதாங்குஷ்டேந சிக்ஷேப ஸம்பூர்ணம் தசயோஜநம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பெரிய கைகள் உள்ளவரும், மிகுந்த பலமுள்ளவரு மான ராமர் (தந்துபியின்) எலும்பைப் பார்த்து அலக்ஷ்யமாகச் சிரித்துவிட்டு கால் கட்டைவிரலால் (எலும்பை) பத்து யோஜனை தூரம் தூக்கி எறிந்தார்.

बिभेद च पुनः सालान्सप्तैकेन महेषुणा ।
गिरिं रसातलं चैव जनयन्प्रत्ययं तदा ॥ ६६ ॥

பிபேத ச புநः ஸாலான் ஸப்தைகேந மஹேஷுணா
கிரிம் ரஸாதலம் சைவ ஜநயன் ப்ரத்யயம் ததா

அப்பொழுது மறுபடியும் (ஸுக்ரீவனுக்கு) நம்பிக்கையை உண்டுபண்ணுவதற்காக (ராமன்) ஒரே பெரிய அம்பினால் ஏழு ஸாலமரங்களையும் மலையையும் பூமியையும் பிளந்தார். (66)

ततः प्रीतमनास्तेन विश्वस्तः स महाकपिः ।
किष्किन्धां रामसहितो जगाम च गुहां तदा ॥ ६७ ॥

ததः ப்ரீதமநாஸ் தேந விச்வஸ்தः ஸ மஹாகபிः
கிஷ்கிந்தாம் ராம ஸஹிதோ ஜகாம ச குஹாம் ததா

பிறகு அதனால் நம்பிக்கையடைந்தவனும், ஸந்தோஷமடைந்த மனமுள்ளவனுமிருக்கும் அந்த பெரிய வாநரனான ஸுக்ரீவன் அப்பொழுது ராமனோடு கூடியவனாய் கிஷ்கிந்தா குகைக்குச் சென்றான். (67)

ततोऽगर्जद्धरिवरः सुग्रीवो हेमपिङ्गलः ।
तेन नादेन महता निर्जगाम हरीश्वरः ॥ ६८ ॥

ததோகர்ஜத் ஹரிவரः ஸுக்ரீவோ ஹேமபிங்களः
தேந நாதேந மஹதா நிர்ஜகாம ஹரீச்வரः

பிறகு தங்கம்போன்ற நிறமுள்ள வாநர சிரேஷ்டனான ஸுக்ரீவன் கர்ஜித்தான் அந்தப் பெரிய நாதத்தால் வாநரர் தலைவனான வாலி வெளியில் வந்தான். (68)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

अनुमान्य तदा तारां सुग्रीवेण समागतः ।
निजघान च तत्रैनं शरेणैकेन राघवः ॥ ६९ ॥

அநுமாந்ய ததா தாராம் ஸுக்ரீவேண ஸமாகத:
நிஜகாந ச தத்ரைநம் சரேணைகேந ராகவ:

அப்பொழுது (வாலி) தாரையை சமாதானப்படுத்தி விட்டு ஸுக்ரீவனுடன் சேர்ந்து யுத்தம் செய்தான். அங்கே ராகவன் ஒரு பாணத்தால் இந்த வாலியை அடித்தான். (69)

ततः सुग्रीववचनाद्धत्वा वालिनमाहवे ।
सुग्रीवमेव तद्राज्ये राघवः प्रत्यपादयत् ॥ ७० ॥

தத: ஸுக்ரீவ வசநாத் ஹத்வா வாலிநமாஹவே
ஸுக்ரீவமேவ தத்ராஜ்யே ராகவ: ப்ரத்யபாதயத்

பிறகு ராகவன் சுக்ரீவனுடைய வார்த்தையினால் யுத்தத்தில் வாலியைக் கொன்றுவிட்டு அந்த வாலியின் ராஜ்யத்தில் சுக்ரீவனையே (அரசனாக) ஏற்படுத்தினான்.

स च सर्वान्समानीय वानरान्वानरर्षभः ।
दिशः प्रस्थापयामास दिदृक्षुर्जनकात्मजाम् ॥ ७१ ॥

ஸ ச ஸர்வான் ஸமாநீய வாநராந் வாநரர்ஷப:
திச: ப்ரஸ்த்தாபயாமாஸ தித்ருக்ஷுர் ஜநகாத்மஜாம்

வானர சிரேஷ்டனான அந்த சுக்ரீவன் எல்லா வானரர்களையும் வரவழைத்து ஜநககுமாரியான ஸீதையைக்காண விரும்பியவனாய் எல்லா திசைகளுக்கும் அனுப்பினான். (71)

ततो गृध्रस्य वचनात्संपातेर्हनुमान्बली ।
शतयोजनविस्तीर्णं पुप्लुवे लवणार्णवम् ॥ ७२ ॥

ததோ க்ருத்ரஸ்ய வசநாத் ஸம்பாதேர் ஹநுமான் பலீ
சத யோஜந விஸ்தீர்ணம் புப்லுவே லவணார்ணவம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பிறகு பலசாலியான ஹநுமார் சம்பாதி என்னும் கழுகின் வார்த்தையால் நூறு யோஜனை விஸ்தாரமுள்ள லவண சமுத்ரத்தைத் தாண்டினார். (72)

तत्र लङ्कां समासाद्य पुरीं रावणपालिताम् ।
ददर्श सीतां ध्यायन्तीमशोकवनिकां गताम् ॥ ७३ ॥

தத்ர லங்காம் ஸமாஸாத்ய புரீம் ராவண பாலிதாம்
ததர்ச ஸீதாம் த்யாயந்தீமசோகவநிகாம் கதாம்

அங்கு ராவணனால் ஆளப்பட்ட லங்கா பட்டணத்தையடைந்து அசோக வனத்தில் இருப்பவளும் (ராமனை) எண்ணிக்கொண்டிருப்பவளுமான ஸீதையைக் கண்டான். (73)

निवेदयित्वाऽभिज्ञानं प्रवृत्तिं विनिवेद्य च ।
समाश्वास्य च वैदेहीं मर्दयामास तोरणम् ॥ ७४ ॥

நிவேதயித்வாபிஜ்ஞானம் ப்ரவ்ருத்திம் விநிவேத்ய ச
ஸமாச்வாஸ்ய ச வைதேஹீம் மர்தயாமாஸ தோரணம்

அங்குளீயகரூபமான அடையாளத்தை (ஸீதையிடம்) சமர்ப்பித்து, (ராமனுடைய) விருத்தாந்தத்தையும் தெரிவித்து ஸீதையை சமாதானப்படுத்தி, அசோக வனத்தின் வெளி வாயிலையழித்தார். (74)

पञ्च सेनाग्रगान्हत्वा सप्त मन्त्रिसुतानपि ।
कुमारमक्षं निष्पिष्य ग्रहणं समुपागमत् ॥ ७५ ॥

பஞ்ச ஸேநாக்ரகான் ஹத்வா ஸப்த மந்த்ரிஸுதாநபி
குமாரமக்ஷம் நிஷ்பிஷ்ய க்ரஹணம் ஸமுபாகமத்

ஐந்து ஸேநாதிபதிகளையும், ஏழு மந்திரிகுமாரர்களையும் கொன்று அக்ஷகுமாரனையும் அழித்து (இந்திரஜித்தின்) ப்ரஹ்மாஸ்த்ரத்தால் பிடிபட்டார்.

अस्त्रेणोन्मुक्तमात्मानं ज्ञात्वा पैतामहाद्वरात् ।
मर्षयन्राक्षसान्वीरो यन्त्रिणस्तान्यदृच्छया ॥ ७६ ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ततो दग्ध्वा पुरीं लङ्कां ऋते सीतां च मैथिलीम् ।
रामाय प्रियमाख्यातुं पुनरायान्महाकपिः ॥ ७७ ॥

அஸ்த்ரேணைந்முக்தமாத்மாநம் ஞாத்வா
பைதாமஹாத் வராத்
மர்ஷயன் ராக்ஷஸான் வீரோ யந்த்ரிணஸ்
தான் யத்ருச்சயா

ததோ தக்த்வா புரீம் லங்காம் ருதே ஸீதாம் ச மைதிலீம்
ராமாய ப்ரியமாக்யாதும் புநராயான் மஹாகபி:

ப்ரஹ்மாவின் வரத்தால் தான் பிரயத்னமில்லாமலே அஸ்த்ரத்திலிருந்து விடுபட்டிருப்பதையறிந்து வீரனான பெரிய குரங்கான ஹனுமார் தன்னைக் கயிற்றால் கட்டிப் பிடித்துக்கொண்டிருந்த அந்த ராக்ஷஸர்களைப் பொறுத்துக்கொண்டு பிறகு மைதிலியான ஸீதையைத் தவிற லங்கை முழுவதையும் எரித்துவிட்டு ராமனுக்கு பிரியமான விருத்தாந்தத்தைச் சொல்வதற்குத் திரும்பி வந்தார். (76-77)

सोऽभिगम्य महात्मानं कृत्वा रामं प्रदक्षिणम् ।
न्यवेदयदमेयात्मा दृष्टा सीतेति तत्त्वतः ॥ ७८ ॥

ஸோபிகம்ய மஹாத்மாநம் க்ருத்வா ராமம் ப்ரதக்ஷிணம்
ந்யவேதயதமேயாத்மா த்ருஷ்டா ஸீதேதி தத்வத:

அளவிடமுடியாத புத்திபலமுள்ள அந்த ஹனுமார் மஹாத்மாவான ராமரை அடைந்து பிரதக்ஷிணம் செய்து 'ஸீதை உள்ளபடியே பார்க்கப்பட்டாள்' என்று தெரிவித்தார். (78)

ततः सुग्रीवसहितो गत्वा तीरं महोदधेः ।
समुद्रं क्षोभयामास शरैरादित्यसंनिभैः ॥ ७९ ॥

தத: ஸுக்ரீவ ஸஹிதோ கத்வா தீரம் மஹோததே:
ஸமுத்ரம் க்ஷோபயாமாஸ சரைராதித்யஸந்நிபை:

பிறகு (ராமர்) ஸுக்ரீவனோடு கூடியவராய் ஸமுத்திரத்தின் கரையையடைந்து ஸூரியனுக்கொப்பான அம்புகளால் ஸமுத்திரத்தைக் கலக்கினர். (79)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

दर्शयामास चात्मानं समुद्रः सरितां पतिः ।
समुद्रवचनाच्चैव नलं सेतुमकारयत् ॥ ८० ॥

தர்சயாமாஸ சாத்மாநம் ஸமுத்ர: ஸரிதாம் பதி:
ஸமுத்ர வசநாச்சைவ நளம் ஸேது மகாரயத்

நதிகளின் கணவனான ஸமுத்திரராஜன் தன் ரூபத்தைக் காட்டினான். ஸமுத்ரராஜனின் வார்த்தையால் நளனைக்கொண்டு அணையைக் கட்டச் செய்தார்.

तेन गत्वा पुरीं लङ्कां हत्वा रावणमाहवे ।
रामः सीतामनुप्राप्य परां व्रीडामुपागमत् ॥ ८१ ॥

தேந கத்வா புரீம் லங்காம் ஹத்வா ராவணமாஹவே
ராம: ஸீதாமநுப்ராப்ய பராம் வ்ரீடாமுபாகமத்

ராமன் அந்த அணையின் வழியாக லங்காபுரிக்குச் சென்று யுத்தத்தில் ராவணனைக் கொன்று ஸீதையையடைந்து மிகுந்த லஜ்ஜையடைந்தார். (81)

ताम्रुवाच ततो रामः परुषं जनसंसदि ।
अमृष्यमाणा सा सीता विवेश ज्वलनं सती ॥ ८२ ॥

தாமுவாச ததோ ராம: பருஷம் ஜநஸம்ஸதி
அம்ருஷ்யமாணா ஸா ஸீதா விவேச ஜ்வலநம் ஸதீ

பிறகு ராமன் ஜனங்களின் ஸபையில் அந்த ஸீதையைப் பார்த்து கடுமையான வார்த்தையைக் கூறினார். (அதை) பொறுக்காதவளான பதிவிரதையான அந்த ஸீதை அக்னியில் பிரவேசித்தாள். (82)

ततोऽग्निवचनात्सीतां ज्ञात्वा विगतकल्मषाम् ।
बभौ रामः संप्रहृष्टः पूजितः सर्वदैवतैः ॥ ८३ ॥

ததோக்நி வசநாத் ஸீதாம் ஞாத்வா விகத கல்மஷாம்
பபௌ ராம: ஸம்ப்ரஹ்ருஷ்ட: பூஜித: ஸர்வதைவதை:

பிறகு அக்னி தேவனின் வார்த்தையால் ஸீதையை தோஷமில்லாதவளாக அறிந்து ராமன் ஸந்தோஷம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அடைந்தவராய் எல்லா தேவர்களாலும் பூஜிக்கப்பட்ட வராய் விளங்கினர். (83)

கர்மணா தேன மஹதா த்ரைலோக்யம் ஸசராசரம்
ஸதேவர்ஷி கணம் துஷ்டம் ராகவஸ்ய மஹாத்மந:

மஹாத்மாவான ராகவனுடைய அந்தச் சிறந்த காரியத்தால் ஸ்தாவர ஜங்கமங்களுடன் கூடியதும், தேவ-ரிஷிக்கூட்டங்களோடு கூடியதுமான மூவுலகமும் ஸந்தோஷமடைந்தது. (84)

அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம்
க்ருத க்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ

ராமன் லங்கையில் ராக்ஷஸ சிரேஷ்டனான விபீஷணனுக்கு பட்டாபிஷேகம் செய்து அப்பொழுது செய்யவேண்டிய காரியத்தை செய்து முடித்தவராகவும் தாபம் நீங்கியவராகவும் ஸந்தோஷமடைந்தார். (85)

தேவதாப்யோ வரம் ப்ராப்ய ஸமுத்தாப்ய ச வானரான்
அயோத்யாம் ப்ரஸ்தித்தோ ராம: புஷ்பகேண
ஸுஹ்ருத்வ்ருத:

ராமர் தேவதைகளிடமிருந்து வரத்தைப்பெற்றுக் கொண்டு வானரர்களைப் பிழைக்கச்செய்து நண்பர் களால் சூழப்பட்டவராய் புஷ்பகவிமானம் மூலம் அயோத்திக்குப் புறப்பட்டார். (86)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பரத்வாஜாச்ரமம் கத்வா ராமः ஸத்யபராக்ரமः
பரதஸ்யாந்திகம் ராமோ ஹநூமந்தம் வ்யஸர்ஜயத்

வீணைகாத பராக்ரமமுள்ள ராமர் பரத்வாஜ முனிவரின் ஆசிரமத்தை யடைந்து பரதனின் ஸமீபத்திற்கு ஹனுமாரை ராமர் அனுப்பினர். (87)

புனராக்யாயிகாம் ஜல்பன் ஸுக்ரீவ ஸஹிதஸ் ததா
புஷ்பகம் தத் ஸமாருஹ்ய நந்திக்ராமம் யயௌ ததா ॥ ८८ ॥

புனராக்யாயிகாம் ஜல்பன் ஸுக்ரீவ ஸஹிதஸ் ததா
புஷ்பகம் தத் ஸமாருஹ்ய நந்திக்ராமம் யயௌ ததா

அப்பொழுது ராமர் ஸுக்ரீவனோடு கூடியவராய் அந்த புஷ்பகவிமானத்தில் ஏறிக்கொண்டு மறுபடியும் நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லிக்கொண்டு நந்திக்ராமம் சென்றார். (88)

நந்திக்ராமே ஜடாம் ஹித்வா ப்ராத்ருபிः ஸஹிதோநகः
ராமः ஸீதாமநுப்ராப்ய ராஜ்யம் புநரவாப்தவான்

நந்திக்ராமே ஜடாம் ஹித்வா ப்ராத்ருபிः ஸஹிதோநகः
ராமः ஸீதாமநுப்ராப்ய ராஜ்யம் புநரவாப்தவான்

குற்றமற்ற ராமன் பிராதாக்களுடன் கூடியவராய் ஜடைகளை நந்திக்ராமத்தில் களைத்துவிட்டு ஸீதையை யடைந்து மறுபடியும் ராஜ்யத்தையடைந்தார். (89)

ப்ரஹ்ருஷ்டமுதிதோ லோகஸ் துஷ்டः புஷ்டः ஸுதார்மிகः
நிராமயோ ஹ்யரோகஸ்ச துர்பிக்ஷ பய வர்ஜிதः

ப்ரஹ்ருஷ்ட முதிதோ லோகஸ் துஷ்டः புஷ்டः
ஸுதார்மிகः
நிராமயோ ஹ்யரோகஸ்ச துர்பிக்ஷ பய வர்ஜிதः

உலகம் மயிர் கூச்சுடன் ஸந்தோஷமடைந்தது. திருப்தியடைந்தது புஷ்டியடைந்தது நன்கு தர்மத்தை அனுஷ்டிக்கிறதாகவும் சரீரத்திலும் மனதிலும் ஆதி வியாதிகள் அற்றதாகவும், பஞ்சம், பயமில்லாததாகவும் ஆனது. (90)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

न पुत्रमरणं किंचिद्द्रक्ष्यन्ति पुरुषाः क्वचित् ।
नार्यश्चाविधवा नित्यं भविष्यन्ति पतिव्रताः ॥ ९१ ॥

ந புத்ர மரணம் கிஞ்சித் த்ரக்ஷ்யந்தி புருஷா: க்வசித்
நார்யஸ்சாவிதவா நித்யம் பவிஷ்யந்தி பதிவ்ரதா:

(ராமராஜ்யத்தில்) புருஷர்கள் ஒரு இடத்திலும் பிள்ளைகளின் சாவை சிறிதும் காணமாட்டார்கள். பெண்கள் எப்பொழுதும் பதிவிரதைகளாகவும் ஸுமங்கலிகளாகவும் இருப்பார்கள். (91)

न चाग्निजं भयं किंचिन्नाप्सु मज्जन्ति जन्तवः ।
न वातजं भयं किंचिन्नापि ज्वरकृतं तथा ॥ ९२ ॥

ந சாக்நிஜம் பயம் கிஞ்சித் நாப்ஸு மஜ்ஜந்தி ஜந்தவ:
ந வாதஜம் பயம் கிஞ்சித் நாபி ஜ்வரக்ருதம் ததா

நெருப்பால் பயம் கொஞ்சமும் உண்டாகாது. பிராணிகள் நீரில் மூழ்கி இறக்கமாட்டார்கள். புயற் காற்றுல் உண்டாகும் பயம், அப்படியே ஜ்வரத்தால் ஏற்படும் பயம் இவை சிறிதும் உண்டாகாது. (92)

न चापि क्षुद्भयं तत्र न तस्करभयं तथा ।
नगराणि च राष्ट्राणि धनधान्ययुतानि च ॥ ९३ ॥

नित्यं प्रमुदिताः सर्वे यथा कृतयुगे तथा ।

ந சாபி க்ஷுத்பயம் தத்ர ந தஸ்கர பயம் ததா
நகராணி ச ராஷ்ட்ராணி தந தான்ய யுதாநி ச

நித்யம் ப்ரமுதிதா: ஸர்வே யதா க்ருத யுகே ததா

அந்த ராமராஜ்யத்தில் பசியால் பயம் ஏற்படாது. திருடர்களிடமிருந்தும் பயம் ஏற்படாது. நகரங்களும் தேசங்களும் தனம், தான்யம் இவைகளுடன் கூடியவை களாக இருக்கும். கிருதயுகத்தில் எப்படியோ அப்படியே எல்லோரும் எப்பொழுதும் ஸந்துஷ்டர் களாக இருப்பார்கள். (93½)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,